[திரு. துரைமுத்துசாமி] [1979 ஏப்ரல் 25

விதிக்கப்பட்டிருப்பதைப் போல அரிசி வாங்கினால் அதையும் 3 மாதங்களுக்குள்ளாக உபயோகப்படுத்திவிட வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் அதாவது தேவையான பொருட்கள் எங்கெங்கிருந்து வருகின்றது. எப்படி சப்ளை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றேன்,

(5) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. கே. சௌந்திரராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பது குறித்து விதி 44-ன் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து இருந்தேன். அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, வரலாற்று புத்தகத்தில் நபிகள் நாயகத்தைப்பற்றி தரக்குறைவாக எழுதி இருக்கிறார்கள் என்பது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். அடுத்து இப்போது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்.

(6) அறிவிப்புகள்.

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.